# உயர் ஞானம்
# 200

மதுரை
சிவராஜயோகி
**க. செல்லையா**
இயற்றியது

★

காபிரைட்] 1949 [விலை அணா 12

# உயர்ஞானம் 200


சிவராஜயோகி

மெய்யுணர்வாளர்:
க. செல்லையா
இயற்றியது
மதுரை

விவேகாநந்தா அச்சகம்
தளவாய் தெரு, மதுரை.

பதிப்புரிமை ஆசிரியருக்குரியது

1949



எமது குருநாதன்

ஞானவள்ளல் பரஞ்ஜோதி மகான்

பரமாத்வைத சித்தாந்த ஆசிரியர்
*மீனாக்ஷிகோவில் தேவஸ்தானம்*
திருத்தேவர் பழநியப்பக் கவுண்டர் அவர்கள்

# முகவுரை

## குறள் மந்திரம்

*எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்*
*ஆன்ற பெருமை தரும்.*

*நூற்றுக்கு அல்ல, ஆயிரத்துக்கு அல்ல, லக்ஷத்துக்கு அல்லது கோடிக்கொருவரே தான் மனம் பொறி அடக்க முடையவரைக் காண முடிகின்றது. அதுகூட அரிது என்றாலும், உண்மைதான் என்று சொல்லலாம்போலிருக்கிறது.*

மனிதனுக்கு எனச் சிறப்பிக்கும் சில முக்கியமான குணங்களுள் மன அடக்கமும், பொறியடக்கமும் முதல் தரமானவைகளாகும். எவ்வளவுக் கெவ்வளவு நேர்மையில் இவ்விரு அடக்கமும் உயர்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அவனது மனிதத் தன்மையும் உயர்கின்றதாகும்

இதுவன்றி-வயிறார உண்பதும், அதற்கான வழிகளைக் காண்பதும், தன்னினம் நாசமாகாமைக்கு வேண்டிய காரியம் (புணர்ச்சி) செய்வதும், அதனாலே பிள்ளை குட்டிகளைப் பெறுவதும்; காலத்தால் மாண்டு மடிந்து ஒழிவதும், ஆகிய இச்செயல்களெல்லாம் மிருகத்திற்கும் இயல்பாய் பொருந்தியவைகளாகவே காணப்படுகின்றன. இது பண்டிதனுக்குத்தான் தெரியும், பாமரனுக்குத் தெரியாது, என்பது அல்ல. இது தெரிய வெகுதூரம் படிக்கவேண்டும் என்பது இல்லை. எவ்விதமான சிறிய பெரிய மிருகத்திற்கும், பறவைக்கும் இச்செயல்களுள் ஒன்றாவது தெரியாமற்போனது உண்டா?

மனிதனும், இவ்விதமாகவே காலமுழுதும் வாழ்ந்து முடிவில் கண்டது மரணமா யிருக்குமேயானால், இது என்ன மனிதனா? அல்லது இரண்டு கால் மிருகந்தானா? என்பது தெரியாமல் போய்விடுமல்லவா? உண்மையில் இத் தகைய மக்களைக்கண்டுதான் திருவள்ளுவர் முதலியோர் மிருகமென்றதோடு விட்டுவிடாமல் மரம்என்றும்வைத்துப் பேய் என்றும்கூடச்சொல்லி யிருக்கிறாரெனத்தெரிகின்றது

இதனால் மனிதன் மரமும் மிருகமும் பேயுமாகாமல் மனிதனாக வாழ்ந்து பயன்பட வேண்டுமானால் அடக்க முடைமை முதலியன அவசியமாகும், அதிலும் மனவடக்கம் பொறியடக்கம் மிகவும் முக்கியமானவையாகும். அடங் கிய மனமுடையவன்தான், தன்னையும், பிறரையும், தலைவ னையும், நேர்மையில் காண்கின்றான். மனமடங்காது, இந் திரியங்களை வெளியே பரப்பிப்பராக்குப்பார்க்கும் மனிதன் பிறவற்றை மாத்திரம் இழக்கின்றானில்லை. தன்னையும் சேர்த்தே இழந்துவிடுகின்றான்.

இங்கு மனம் பொறியடக்கமென்றால்—கட்பொறியைத் துணிகொண்டு கட்டிவிடுவது, காதுப்பொறியைக் களிமண் கொண்டு அடைத்துவிடுவது, மூக்கைப் புளிகொண்டு மூடி விடுவது என்று அர்த்தம் அன்று. நாலா பக்கமும் கரை யிட்டுக் குளத்து நீரை அடக்கி வைப்பது, வேண்டியபோது தகுந்த மதகு வழியாக விட்டுப் பயன்கொள்வதற்கே யாகும். அப்படியே வற்றிப்போகட்டும் என்பதற்கும் அல்ல.

அவ்வாறே இருதயம் என்னும் குளத்தில் மனம் என் னும் நீரை அடக்கி வைத்து கண் காது முதலிய பொறி

வாயிலாக தகுந்தமுறையில் வேண்டிய அளவு உபயோகிக்க வேண்டும்.

பொருள் தேடுவது, உடலைப் பேணுவது, வீடு கட்டுவது முதலியவைகள் எவ்வளவுக்கு அவசியமோ அதற்கு மேல் அவ்வழியில் செல்லும் மனோ விருத்தி நீரை அடைத்து வேறு பயனுள்ள வழியில் செலுத்தவேண்டும். அப்படியின்றி மீண்டும் அதேவழியில் மனநீரைச்செலுத்துவானுனல் விளைந்த அது வீடுவந்து அனுபவிக்க இல்லாமல்கூட கெட்டுவிடும். ஒரு மதகின் வழியுள்ள பூமி விளைந்த பின்னும் அதை அறுத்துப் பயன்கொள்ளாது மீண்டும் பழையபடி, மதகு திறந்தபடி, நீர் இறைத்துக் கொண்டிருப்பானுனல் அது எவ்வளவு முட்டாள்த்தனமான காரியம் என்பதைச் சிறிது சிந்தனைசெய்து பார்க்க வேண்டும்.

இன்னும் வேறு மதகின் பாசன பூமியில் பயிர்காய்ந்து கொண்டிருக்கவும், அதற்கான மதகைத் திறந்து நீர் பாய்ச்சாமல் விளைந்த வயலுக்கே மீண்டு விடுவானுனல் இது இன்னும் எவ்வளவு முட்டாள்தனமான செயலாக ஆகும் என்பதையும் கருதிப்பார்க்கவேண்டும்.

ஒருவன் மனோவிருத்தியை பொருள் சேர்ப்பது, உடம்பு காப்பது, அதற்கு வீடு கட்டுவது முதலிய வழிகளில் செலவிடவேண்டியது மிக அவசியமேயாகும். ஆனுல் காலாணி செத்து காதடைத்து கண் பஞ்சடையும் வரையிலும் அதிலேயே போக்கிவிடுவது மிக மிக மடமையும் பேதமையுமாகும். அவைகள் ஓரளவுக்கு அமைந்த பின்னராவது சிக்கிரமாக அதை நிறுத்தி கல்வி, கேள்வி, பரோ



சிவராஜயோகி
மெய்யுணர்வாளர் க. செல்லையா

# உயர்ஞானம் 200

## காப்பு.

பிண்டசிருஷ்டி அண்டசிருஷ்டி பிறப்புக்கும் பரஞ்
[ஜோதிகாப்பு
விந்துநிலை உன்முடியில் வீற்றிருக்க விண்ணொளி
[யான் பரஞ்ஜோதிகாப்பு
விந்தையெலாம் உன்னறிவில் விபரங்காண விந்தன்
[பரஞ்ஜோதி காப்பு
விதமான சொருபமுத்தி அடைவதற்கு விமலன்
[பரஞ்ஜோதி காப்பு
மூர்ச்சையில் இருந்தஉன் பிறவிமுடிக்க முத்தன்பரஞ்
[ஜோதிகாப்பு
மோனவீட்டில் வீற்றிருக்க முதல்வன்பரஞ் ஜோதி
[காப்பு
எந்நாளும் பிறவாமல் தான்ஜொலிக்க இறைவன்பரஞ்
[ஜோதிகாப்பு
இக்கடத்தில் உன்னிலையை உணர்ந்துகொண்டால்
[ஏகமும்நீ காப்புத்தானே. 1.

அண்டசிருஷ்டி பிண்டசிருஷ்டி அனைத்துக்கும் சிவமே
[காப்பு
அகிலமெலாம் விரிந்துநின்ற பொருளுக்கும் சிவமே
[காப்பு
பண்டையநாள்மெய்யறிஞர்மெய்நிலைக்கும்சிவமேகாப்பு
பாருலகி லுள்ளபொருள் உய்வகைக்கும் சிவமே
காப்பு
கண்டறியும் பொருளனைத்திற்கும் கருத்தறியசிவமே
[காப்பு
கடைசியில் சிவநிலையில் அமர்வதற்கும் சிவமேகாப்பு

அடுத்துநில்லே ஆதிநிலை உன்னுட்காண
　　ஆசானின் கிருபையால் அறிவைப்பாரு
எடுத்துநின்ற கருவின்கனம் சமங்காண
　　இறங்குபடி தனைக்காணக் குருவைக் கேளு
அடுத்துரைப்பான் இறங்குபடி உன்னுள்த்தானே
　　அணிந்திருந்த கனமதனை அழுத்திக்கொண்டால்
தடுத்துநிற்கும் கருவின்கனம் மேல்ச் செல்லாது
　　தப்பாது அப்படியின் தன்மை பாரே. (9)

தன்மையுடன் பாரப்பா இறங்குபடி
　　தானான தலைவர்கள் கொண்ட மார்க்கம்
வன்மையினால் தோணாமற் கருவை யேற்றி
　　வகையறியாது மாண்டார்கள் யோகிகள்தான்
உண்மையிலே யிம்மார்க்கம் உணர்ந்துகொண்டால்
　　ஒருபோதும் கெடுதியில்லை உயிருக்குத்தான்
மேன்மையாய்ப் பிறவிமுடிக்க இக்கடத்தில்
　　மேதினியில் நீயுமே வாழலாமே. (10)

வாழலா மேறுபடி இறங்குபடி தன்னைக்கண்டால்
　　ஏகாந்த உச்சியிலே நிர்மலமாய் நின்று
ஆடலாம் சுழிமுனைக்கும் பிடரிக்குமப்பா
　　அப்பனே அதிசயத்தைக் கண்டு பாரு
பாயுமப்பா நினைத்தவிடம் தன்கருத்தால்
　　பார்தனிலே யுன்போல் சுகம் யாருங்காணார்
காயமது கசடற்றுச் சுக்கா வாகும்
　　கனமான வித்தவத்திற் கருதிநில்லே. (11)

நில்லப்பா நிலையறிந்து கருவை யேற்று
நீ மகனே அதற்கப்பால் நிலையும் பாரு
வெல்லப்பா மும்மாயை அறவேவெல்லு
வேதாந்த நாதமது வெளியே பாயும்
மெல்லப்பா வுன்மதிதான் னிலக்குமட்டும்
மேதினியில் மௌனத்தில் வீற்றிருப்பாய்
தோற்றமப்பா யுன்னிலையி லுன்சொரூபம்
தேஜஸ்ஸான வச்சொரூபத்தில் சேர்ந்து வாழ்
வாய் (12)

பூட்டப்பா யுன்மதியைப் புருவ மத்தியில்
பூரணச் சந்திரனின் ஒளிபோல்க் காணும்
காட்டுமப்பா முக்கண்ணின் வழிதானங்கே
கண்டதன்மேல்க் கருத்துடனே நின்றாயாகில்
தீட்டுமப்பா வுன்னறிவைச் சோதிபோல
தேசத்தி லுள்ளனைத்தும் தெளிவாய்க்காண்பாய்
வாட்டுமப்பா கனலாயுன் திரேகமதை
வகையுடனே னின்றதனின் வண்மைபாரே (13)

வண்மையுடன் பாரப்பாப் புருவமத்தி
வகையான வுன்சொருபஞ் சேருமட்டும்
உன்மயமாய்த் திகழும் சிவப்பொருளை
உன்னிலையில் நீயறிந்து கொண்டால்
அம்மயமும் மும்மயமும் ஏகமயமும்
அரூபத்தி லாடும்நாதன் மயமாய்
விண்மயமாய் விண்தன் வடிவாய்
விண்ணிலாடும் வீரஜோதி யாவாய் (14)

பாரப்பா என்மகனே பதிந்துபாரு
பக்தியுடன் பதிந்துமே பார்த்தாயாகில்
ஏறுமப்பா வுனதுகரு சுழிமுனைக்குள்
எழுந்துமது விழுதினைப்போல் மேலேசெல்லும்
ஊன்றப்பா வுன்மதியை சுழிமுனைக்கிருவிரலுக்குமேல்
உலாவுகின்ற வாசியது ஒடுங்கிப்போகும்
ஓடுமப்பா சுழிமுனைக்கு மேல்கீழாக
ஓர்நிலையே நீயோவாய் ஊன்றிப்பாரே (15)

நில்லப்பா நிலைகொண்டு பிடரிமீதில்
நீதியுடன் பிடரிமீதில் நின்றாயாகில்
வன்மையுடன் கூசுமப்பா பிடரிதனில்
வழுவாது கண்டதனில் நின்றாயாகில்
தோணுமப்பா பிறவியின் காரணங்கள்
தேஜஸா முன்னொளி சூழ்ந்துநிற்கும்
ஆழ்த்தப்பா வக்கண்ணி லுன்னிலையை
அனுபவங்கள் அனைத்தையு முடிக்கலாமே (16)

பூட்டப்பா வுன்கருத்தை பிடரிதன்னில்
பூரணமா யுன்னொளி பூரித்தேநிற்கும்
தீட்டப்பா வுன்கருத்தை யந்நிலையில்
ஈண்டியபல் கருமமதை விளக்கிக்காட்டும்
ஆட்டப்பா கருமமதை யந்நிலையில் நின்று
அனுபவங்க ளனைத்தையுமே முடிப்பதற்கு
ஒட்டப்பா வுன்னொளியை விண்ணொளியில்
ஒட்டியபின் விண்ணொளியேயுன்னொளியாமே 17

பாங்குடனே ஆசானின் மார்க்கந் தன்னில்
பதிந்திருந்து உச்சியிலே பார்த்தாயாகில்
வாங்குமப்பா வுனதுகரு சுழலில்மைந்தா
வைத்திருந்த அறியாமை யனைத்துமங்கே
ஓங்குமப்பா உனதறிவு அச்சுழலால்
ஒடுங்கிநின்ற கருமமது வெளிதானாகும்
நீங்குமப்பா வுன்கரும மச்சுழலால்
நெருங்கிநின்று நீயதனின் நேர்மைபாரே (18)

ஆடுமப்பா சக்கரம்போல் அண்டவுச்சி
அகிலமெலாஞ் சுற்றுவதன் னுள்ளேகாணும்
ஓடுமப்பா சிரசில் முழுதும் மைந்தா
ஊரலொன்று நமநமவென் றுள்ளேகாணும்
பாடுமப்பா அவ்வழியில் கருச்செல்லும்போது
பரீட்பரீட்டென் றொருசத்த முள்ளேகேட்கும்
நீளுமப்பா வுச்சிக்கும்பர வெளிக்குமைந்தா
நேர்மையுடன் நின்றதனைப் பாரே (19)

ஆனதோர் மெய்யுணர்வி னனுபவம்பாரு
அண்டபகி ரண்டம்வரை யொன்றாய்நீண்டு
காணுமது தன்சிரசின் மேல்பாகத்தில்
கனவேகமாக அதுசெல்லக்காணும்
ஊன்றினா லந்நிலையிற் றானுமங்கே
உலாவுமது தன்சிரசில் முழுதும்பாரு
காணுகின்ற வலஞ்சுழலில் கவர்ந்துநின்றால்
கருணையுட னருளமுது முண்ணலாமே (20)

கண்டுணர்ந்தேன் மெய்யுணர்வின் கருணை தன்னைக்
கண்ணிமையா நாட்டு நடு புகுந்துநின்றேன்

விண்டுணர்ந்தேன் எமதறிவின் ஜொலிப்பதனை
  விதமான ரசமணியுந் திரளக் கண்டேன்
அண்டமுதற் பிண்டம்வரை யாட்டங் கண்டேன்
  அகிலமெலாந் தானென்றறிந்துகொண்டேன்
கண்டுணர்ந்தேன் என்னிலையைத் தரணிதன்னில்
  கனல்மயமாய் என்நிலையை யாக்கிக்கொள்வேன்.
(21)

நின்றுணர்ந்தேன் மெய்யுணர்வின் நிலையார்தன்னை
  நீதியுடன் அந்நிலையில்த் தானமர்ந்து
கொண்டிருந்த பிறவிகளனைத்துமதால்
  கொடியோடே தான்பிடுங்கி வேரறுத்துக்
கண்டிருந்த மெய்யுணர்வின் கனத்தினால்த்தன்
  கடமதனைப் பொன்மேனி யாக்கிக்கொண்டு
நின்றிருந்த நிலைக்கப்பால் அறுதிகண்டு
  நிலைபோர வந்நிலையிற் றனமரலாமே. (22)

அண்டத்திருந்து அகிலமெலாந் தான்விரிந்து [றியக்
  பிண்டத்துள் நான்புகுந்தேன்பிறப்பதனைத்தான
கண்டறியும் பொருளனைத்தும் கர்த்தன் யாரென்று
நோக்கக்
  கண்டறிந்தேன் பொருளனைத்துள் கருவி
னெனதுநிலை
ஒன்றிலிருந்தே யுலாவு பொருள் உள்ளனைத்துங்
  கண்டறியுமெய்நிலை கருதவமென்றறிந்தேன்
கொண்டிருந்தபிறவி தனைத் தானறிந்து
  குதூகலமாய் என்னிலையில் அமருவேனே. (23)

காப்பு

வளருமதி யோனுக்கு வள்ளல்பரஞ் ஜோதிகாப்பு
கழலும் விர்து கருசெல்வி யாகக்கரு தவமேகாப்பு
பகரும்ஞானம் பாரினிற் ஜொலிக்கப்பகரு மொழியேகாப்பு
இகபரமி ரண்டிலுமின் புற்றிருக்க யிணைப்பேகாப்பு
திருவுருவம் போற்செடமது ஜொலிக்கத்திரண்ட மெய்க்கரு
காப்புத்தானே (24)

காப்பு

முக்திக்கு மூலங் காப்பு
மூலத்திற்கு முனிவன் காப்பு
முனிவனுக்கு முதல் காப்பு
முதலுக்கு அதுவே காப்பு (25)

தீர்த்தங்க ளாடித் திரியும்சிறப்புடையீர்
தீர்த்தங்க ளாடுந் திசை யறியீர்
தீர்த்தங்க ளும்மிடந் தெரிந்துநீ ராடினால்
தீர்க்கமான உன்னிலையிற் சேர்ந்திடுவீர்காணீர் (26)

மந்திரங்க ளோதும் மதி யுடையீர்
மந்திரங்க ளோதும் வகை யறியீர்
மந்திரங்க ளோதும் வகையுண் டேல்நீர்
மந்திரமது தானாய் மருவி நிற்கலாமே (27)

புருவத்திடை னடுவிற் பொட்டிடும் புண்ணியர்காள்
புருவத்திடை னடுவிற் பொட்டிடும் பொருளறியீர்
புருவத்திடை னடுவிற் பொட்டிடும் உள்பொருளறிந்தால்
புருவத்திடை னடுநின்று பூரிக்கலாமே (28)

காஷாய வேபூண்டு காடே திரிந்தாலும்
பாசமென்று சொல்லி யறிவிற் பற்றைவெறுத்தாலும்
மாசற்ற கொள்கையின் மாமெய்ப் பொருளை
நேசித்தா லல்லவோ நின்கதி யடைவாய் (29)

மாசில்லா நற்பொருளை மாணிக்க மெய்ச்சுடரை
வாசியென் றோதும் வகையறியா மானிடர்காள்
மாசில்லா மெய்ஞானி மன்னன்பரஞ் ஜோதிநாடி
வாசிதனை யிழுத்து வைத்துச் சுழிமுனையிற்பாரே (30)

வாசிவாசி யென்றோதும் வகையறியா மூர்க்கர்காள்
வாசியின் பொருளறிந்து பூசிக்கும் விதமறியீர்
வாசியின் பொருளறிந்து பூசிக்கும் விதமறிந்தால்
ஈசனிலே யே இவனிலை யாமே (31)

மூலத்தி லுள்ள முச்சுடர்ப் பொருளை
காலத்துக் குள்ளே காபாலத்தி லேற்றி
வேலொத்தக் கண்ணை வெளியில் விழித்திரு
காலனை வெல்லக் கருத்தது வாமே (32)

உந்திக்குக் கீழே வெளிச் செல்லு மக்கருவை
தந்திரமாய்க் கம்பவழித் தான்கடத்த வல்லிரேல்
சிந்திக்கு முன்னறிவு சிரசி லுணர்வுடனே
சந்திக்கு முன்சொரூபம் க்ஷணத்தில் காணீர் (33)

உண்ணும் உணவில் உயிர்பொருளை மேல்வாங்கி
தின்னும் சுவையனைத்தும் சூக்குமத்திற் கேயீந்தால்
பண்ணும் பக்குவம் அதுவே யுன்னிலைக்கு
விண்ணில்க் கலக்க விதமதுதானே (34)

கங்குல் பகலறக் கலந்துநிற்கு மெய்த்தலத்தில்
தங்கும் பொருளறிந்து தாம்நிற்க வல்லார்க்கு
பொங்கும் இவனறிவுப் பிறப்பின் வகைமுடிக்க
எங்குந் தம்மயமாய் ஏகமுங் காணலாமே (35)

ஆட்டமது பாட்டம் தன்னம்பலத்திற் கண்டார்க்கு
தேட்டம தெங்கே தேசத்தி னுள்காண
பொட்டிட்ட மெய்க்கருவுன் புருவத் திடையிருந்தும்
நாட்டம் நடிக்கும்அதை நாடிலேயே தெய்வமென்று (36)

போதங்கள் படித்து வாதங்கள்செய்யுமதி யீனர்காள்
போதத்தின் பொருளறிந்து பூசிப்பி னுன்கருத்தால்
வாதந் தனைச்செய்ய வகைப்பட்ட வுன்கடத்தை
வாதத்தின் குணம்போல் வயங்கவைக்கும் காணீர் (37)

கர்பஞ்செய்ய கடைச்சரக்கை கனல்மூட்டும் காமுகர்காள்
கர்ப்பத்தின் பொருளறிந்து கண்டீரோ குணமதனை
கர்ப்பமதைக் காண கருவுண்டா லுன்கடத்தில்
அப்பொரு ளன்றோ யாகுமது மெய்க்கர்ப்பம் (38)

ஏகத்தில் நின்று யேங்கிநிற்கு மென்பொருளை
போகத்தில்நின்றுணர்ந்து நிற்க வல்லார்க்கு
தாகந்தனை யறுக்குந் தன்னிலையிற் தான்கலக்க
யோக ஞானத்தில் நின்று யோசித்துப்பாரே (39)

பூண்டிருக்கு மிவ்வேடம் பூர்வீகர் தானறிய
ஆண்டிதன் வேடம் பூண்டே யலைந்தாலும்
தூண்டி லகப்பட்ட சிறுமீன்போ லுன்னிலையை
மாண்டிருக்கும் வகையதனை மதியிலறிந் துணர்வீர் (40)

ஆசான் தனைக்கண்டு ஆதிநிலை உள்ளுணர
பாசாங் கெதற்குப் பயின்றீர் பலமில்லீர்
கூசாம லும்நிலையைக் கூறின் அவனிடத்தே
ஈசனது நிலையி லேறி நிற்கலாமே (41)

கலக்க மில்லா நெஞ்சம் காண்போருள் தான்பதிய
பழங் காலத் தூய்வழி பாரீர்உலகத்தீர்
துலக்கு முன்னறிவை ஜோதியிற் றணலாக
வழங்கும் வள்ளலின் வாண்மு கங்காணீர் (42)

கள்ளங் கபடமற்றுக் கபாலத்தில்த் தானிற்க
மெள்ளமெல்ல வுங்கருணை மேலதனி லேற்றுவித்தால்
தெள்ளமுதம் போல் திரண்டதுவு மேகசியும்
கள்ளமில்லாமலே கசிந்து ருசி பாரே (43)

தள்ளாதக் கால மொன்றிருக்கத் தான்கண்டு
நில்லாத விப்பருவம் நிலைத்த சமயத்தே
பொல்லாத வும்மாயைப் பொசுக்க வழிகாண
செல்லா விடஞ்சென்றுச் செடப்பொரு ளைக்காணீர் (44)

ஆடும் பொருளுக்கும் அசையா உட்பொருளுக்கும்
பாடும் பொருளுக்கும் பரவசத்துட் பொருளுக்குந்
தேடும் பொருளுக்கும் தேகத்துட் பொருளுக்கும்
ஊட்டும் பொருளாம் உள்பொருளைக் காணீர் (45)

தன்னை யறிய ஸ்தலபல முண்டாக்கி
பின்னையும் உள்ளேகம்பம்—பீடம் மூலத்தானம்
அங்கங்க ளாக அரன் விஷ்ணு சிவனைவைத்து
தன்னை யறிந்த ஸ்தலமதை நீஉணரே (46)

படித்த படிப்பாற் பலகேள்வி கேட்போரே
படித்த படிபிற் பலனென்னக் கண்டீர்
படிக்கத் தலைப்பட் டபாரு முன்னறிவை
படித்தப் படிப்பின் பலனடைவீர் காணீர் (47)

வாங்கும் பதிலை வைக்கு மிடமில்லாது
ஏங்கித் தவிக்கும் எளிய அறிவீனரே
ஓங்கு முன்னறிவு வுன்னுள்ளே நீயறிந்தால்
வாங்கும் வகைக்கு வளர்ந்திருக்கு முன்னறிவே (48)

தன்னை மறந்துத் தலைவன் வேறென்றிருக்கால்
உன்னை யறிவ தெங்கன மூமர்காள்
தன்னை யறிந்துத் தலைவனுந் தாமாக
உன்னை யறிய வுருப்படுவீர் உலகோரே (49)

தவமது பெற்று தயவில்லாது நின்று
பவமது ஒழித்துப் பரத்தி லக்கியமாக
கருதவம் புரியக் கண்டு மெய்க்குருவை
புரிவீர் மெய்த்தவம் புருவத் திடைநடுவே (50)

அந்திசந்தி யிருநேர மடைக்கலமே குருவென்று
சந்தித் துன்னிலையிற் சார்ந்திருக்க வழிகாண
சிந்தித் துன்னறிவில் சிரமமில் லாதிருந்து
மந்திர மதில்லா மார்க்க மதைக்கேளீர் (51)

தாடி முடிதரித்துத் தவசியென்றுப் பேரெடுத்துப்
பாடித் துதிக்கப்பல மந்திரங்க ளீய்ந்தாலும்
நாடி யுருவி லொடுங்கு நற்சுடரை எப்போதும்
கூடிக் குலாவக் குறிப்புணர வல்லார்க்கு
ஈடில்லை இவ்வுலகி லிசைந்துணர்ந்து காணீர் (52)

அறிவின் தொழிலறியார் ஆசான் தனையறியார்
கருவின் திறமறியார் கருத்தின் பொருளறியார்
உருவி னுண்மையறியார் உமக்கு உபதேசஞ்செய்வார்
கருவி னிலைகாணார் காட்டும்வழி யெதுவோ (53)

சொன்னய மறியார் ஜோதி தனையறியார்
வன்சொல் லீவார் வார்த்தையின் முடிவறியார்
தன்னிலை தானறியார்த் தாரணியிற் குருவென்பார்
என்செய்வார் தன்னிலைக்கு யேறுங் கருவறியார் (54)

ஏக்கம் தனையறியார் கருவேத்தும் விந்தைதானறியார்
காக்கும் விதமறியார்க் கருத்துண்ணப் பொருளறியார்
போக்கும் பொழுதறியார்ப் புலனைந்துந் தானறியார்
ஆர்க்கும் வகைஈவார் அடைந்தயிவர் பலனெதுவோ (55)

செல்லும் ஞாபகத்தால் செடமதுவே செல்ல
அல்லும் மணமும் குணமும்விட் டகலாதுபோய்
கல்லும் முள்ளும் கசிந்துவரும் சகதிகளில்சிக்கி
வெல்லும் வகையறியாது விழுந்துழலும் மானிடரே (56)

மக்களோடுப் பெண்டீர் மருவிக்குலாவு மாந்தர்காள்
பக்கென் றுயிர்ப் பிரியும் வேளையில்
தக்குமோ மக்கள் பெண்டீர்த் தகுமோவச்சணத்தில்
தக்கியவுயிர் நிற்கும்போதுத் தன்னிலையை காடீர் (57)

ஆலைத் துயர்க்கிடையில் அகப்படு மிவ்வுலகீர்
காலைத் துயி லெழுவது காணீரோ
மாலைவந் தடுக்குமுன் மதியின் னிலையறிய
கோலம் தனைவெறுத்தக் குருவதனை காடீர் (58)

விதிவிதி யென்று மதிமோசம்போகு மாந்தர்காள்
விதியின் பொருளறியாது மதியின் செயலனைத்தும்
விதியின் செயலென் றோதும் மதியினர்காள்
விதியின் பொருளறிந்தால் மதியின்செயலென் றுணரலாமே (59)

மதமத மென்றுமதம் பிடித்தாடும் மாந்தர்காள்
மதமெதற் கென் றறிந்திரோ மதத்தீர்
மதம் மதியி னொழுங்குக்கே மதியினிலையறிய
மதியி னிலையறிந்தால் மதமெங்கே மாந்தர்காள் (60)

தையல் மடிபிடித் தாள்பணியு மல்லர்காள்
பையன் பிறந்துவிடின் பார்த்தின் புறுகின்றீர்
மெய்யில் மரணபய மேலிட்டு வந்தடுத்தால்
ஐயயோ வென் றலறுகின்றீர் ஆவதென்ன (61)

சிவமகன்ற சவங்கண்டே வழுகின்ற ஜெகத்தீர்
சிவமகன்றால் செய்திடுவ தொன்றில்லை காணீர்
சிவந்தா னுடம்புள் ளிலங்குஞ் சமயத்தே
தவநிலையில் நின்றவனைச் சார்ந்திடுவீர் நீரே (62)

மண்ணு மரவைத்து மகிழ்கின்ற மண்டுகமே
பண்ணுமது வேதனைப் பார்க்கலையோ நீவீர்
எண்ணு முன்னாவி யிருக்குஞ் சமயத்தே
விண்ணுள் கலக்க விதமதைக் காணீர் (63)

தூங்குஞ் சமயத்தே சுவாசம துள்ளோடி
வாங்குஞ் சமயத்தே வழிமாறிப் போய்விட்டால்
ஏங்குவ தெங்கே யேதுசெய்வீர் இவ்வுலகிற்
பாங்காய்க் குருவடைந்து பாருமுன் னிலையே (64)

வைத்த பொருளை வகையின்றிச் செலவிட்டு
கைத்தாளம் போட்டுக் கடுந்தவசிப் பேர்பூண்டால்
வைத்தப்பொருளி னிச்சை வழுதுமோ யுன்னிடத்தில்
பைத்தியம் போலேநீர் பகருவது ஏன்உரையீர் (65)

கருவின் பீடத்தி னுள்ள கனகமணியை
மருளை யொழிக்க மருந்தாகக் கொள்வாரேல்
திருவுருவம் போற் ஜெடமது ஜொலித்து
அறுதிரைத் திறந்துநின்று ஐக்கிய மாகுவாரே (66)

முப்பாலுந் தாண்டி முடிவில் மணிதிரள
அப்பாலுக் கப்பா லவனிலையிற் றாமமர்ந்து
எப்போதுந் தாம்பிறவா யேக்கமது முடித்து
அப்பன்பரஞ் ஜோதியாய் அம்பலத்தி லாடுவாரே (67)

தப்பா துணர்த்தும் தம்உயிரின் மெய்யுணர்வை
எப்போதும் நோக்கி யேக்கமது தான்முடிக்க
அப்போதுக் கப்போது வனுபவங்கள் தாமுணர்ந்து
முப்பாலுந் தாண்டி முடிமீ தமரலாமே (68)

கம்பமதி லேறிக் கனல்வாய்க்கா லுள்பாய்ந்து
தம்மயங் காணத் தலையுச்சி மீதமர்ந்து
எம்மயத்திற்கு மும்மயத்திற்கு யேக்கமதை நீரறிந்து
அம்மயத்தில் நீவி றமர்ந்து இருக்கலாமே (69)

ஓங்காரக் கம்பத்துள் ளூடுருவி நீச்சென்றுற்
பாங்காக வுச்சித் தலையிற் பதிந்திருந்து
நீங்காப் பெருவினையை நீதியுட னீகழித்து
ஏங்கா திருந்தே யேகத்திற் கலக்கலாமே (70)

தெள்ளமுத மெய்யுணர்வைச் சிரசுதனில் தான்திரட்டி
அல்லும் பகலு மகலாமல் நின்றதானாற்
செல்லாத் திரையாறுஞ் சிராகத் தான்துலக்கி
வெல்லாத மும்மாயை விருப்பமுட னேகழித்து
கொள்ளாத சிவனிலையிற் குறிப்புட னமரலாமே (71)

ஏக்கமிகக் கொண்டு யேங்கிநின்றே யவளிடத்தில்
தூக்கமதுத் தூங்கித் துயில்விட் டெழுந்தாற்போல்
ஊக்க மிகக்கொண்டு உன்னிலையில் நீகலக்கத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெற வழிகாணீர் (72)

புனைந்தவிப் பிறப்புக்கு புனிதங்காண வுன்னிலையிற்
இணைந்தவிக் கடஅணுக்கள் இனியுனை அணுகாமற்
துணைஇணை யில்லாதுத் தூயவெளியில் நீகலக்க
அணையும்எம் நாதனை யாதிநிலை நீர்காண (73)

அறிவீ ருலகீர் ஆற்றல் மிகக்கொண்டு
தெரிவீ ரும்நிலைத் தேகத்தி னுள்ளே
புரிவீர் மாதவம் புருவத் திடைநடுவில்
அடைவீர் உம்இருப்பு அரன் நிலையில் (74)

கண்டுணர்ந்த மெய்ப்பொருளை கருத்திற் பதிக்காது
விண்டுவிண்டு வேதனைக்குள் ளாகும்வெறு மண்டுகளே
அண்டி யவனிடத்தி லறிந்தப் பொருளின்பால்
எண்டிசையுந் தூற்றும் ஏதுவுக்கே யாளாநீர் (75)

அந்தர் உலகத்தே யாதியந்த முள்ளடக்கி
சந்தோஷ மாய்த்துய்க்கத் தாரணியில் தான்மேவி
பந்தங் களைக்கண்டுப் பழரசம்போ லுள்பதுங்கி
தன்னிலையில் தான்கலக்குந் தன்மைதனை வீணிழந்தே
எந்நாளுந் தான்பிறக்கு மேக்கமதுக் காளானீர் (76)

ஆடிக் கொருதரம் அமாவாசை யனுதினம்
தேடிவர் தடுத்துத் தேகம்விட்ட வான்மாவை
பாடித் துதித்துப் பந்தத்துக் குள்ளாக்க
நாடி யிழுத்தால் நலனென்னக் காண்பீர் (77)

மந்திரங்க ளோதி மாண்டவரை மீண்டிழுக்க
தந்திரங்கள் செய்யுந் தம்பதிகா ளுணர்மின்
யந்திரம்போல் உம்கடத்துள் இழுக்க கடமாறு
சந்தித்தே யுள்புகுந்தால் சாருவதென்னே (78)

பிறந்த குழந்தைதனைப் புரிந்ததா லுன்னறிவில்
மறந்த கடத்தைவிட்டு மாறின வான்மா
புகுந்ததுப் பிண்டத்துள் ளென்றே யறிந்தீரோ
தகுந்தகட மிருக்கும்போதுத் தம்மறிவைக் கானீர் (79)

ஆடுஞ் சக்கர மம்பலத்தில் தானிருக்க
பாடும் மெய்மொழி பாத்தி லுலாவ
கூடு மன்பர்கள் குவலயத்திற் றானிருக்க
ஆகுங் குழந்தை யாண்டவன் சிருஷ்டியோ (80)

பிள்ளைகளைக் காணப் புரண்டலையும் பித்தர்காள்
பிள்ளைப் பிறப்ப ததற்கென் றறிந்தீரோ
தொல்லுலகிற் றேன்றித் தோற்றுவித்தப் பொருளனைத்தும்
கள்ள மில்லாமற் கழிக்கவழி இதுவன்றே (81)

மானிட ரென்றால் மாநிலத்தில் மதியுடையோர்
மாறாத மேல்நிலையில் கலக்கவல்லோர்
தேறாத நிலையொன் றில்லைஎன்று தெரியகண்டோர்
தீர்க்கமாய் சிந்தனை யுள்ளோன் மானிடராவான் (82)

ஆய தொழில்கள் அத்தனையும் கற்றாலும்
மாயமாய் தனை இழுக்கும் மனதை யறியாது
தூயமாய் மனவாக்கை துலக்கவழி காணாது
காயமன வாக்கைக்கண்டு கடைத்தேர எவ்வழிகாண் (83)

வந்த வுயிரால் வகையாகத் துய்க்காது
பந்தங் களைவெறுக்கப் பரதேசி வேஷம்பூண்டால்
இந்தகாளி லனுபவ மிறுதி முடிப்பதெங்கே
வந்த வுயிரால் வகையென்ன கண்டாயோ (84)

பட்டம்போல் ஆடியும் பாதவிக்கும் மானிடர்காள்
இட்டகய ரற்றுவீழ்ந்தால் இறுதிஎன்ன காண்கிறீர்
கட்டகடம் தானிருக்கக் கடப்பொருளைக் காணாது
இட்டவிதி தானென்று ஏசபேச லாகின்றீர் (85)

எந்த பெரிய அப்பி யாசத்தி லிருந்தாலுமே
ஏதுவுக்குத் தக்கவாறு தொழில் செய்து
சொந்த முயர்ச்சியினால் உடல் வளர்த்தால்
சுகமாகத் தன்நிலையும் தானே கூடும் (86)

அந்திசுத்தி யானதும் அவனறிய காண்கிறீர்
மந்திரங்க ளோதிநீர் மதியறிய காண்கிலீர்
யந்திரம்போல் இக்கடம் இழைத்துக்கெட்டு போனக்கால்
தந்திரத்தால் உன்னுள்ளே தனையறிய காணுமே (87)

செத்தசடம் தனையறிந்து சத்தமிட்டு கூவுகிறீர்
செத்தசடம் எப்படியும் நினைத்தழுதால் தூக்கமே
நித்தநித்தம் சாவுகின்றீர் நினைத்துணர வழியறியீர்
அத்தனையும் மறந்துவிட்டு ஆவிபோக கூவுகிறீர் (88)

பத்திபோல் சிவனை பரம்பொருளை தன்னுள்ளே
நித்தியம் அதையுணர்ந்து நிலைநிறுத்த வல்லிரேல்
சத்தியம் இப்பிறவி சடுதியில் முடிப்பது
இத்தரையில் காணும்யாரும் இனிபிறப்ப தில்லையே (89)

ஆண்டுதோறும் பெண்களை அனுதினமும் கூடியே
மாண்டுபோகும் மானிடரே மர்மம்யென்ன கண்டிரேல்
மீண்டுமீண்டு இப்புவியில் மிதக்குகின்ற மாந்தர்காள்
கண்ட கடமிருக்கும்போது கருவறிந்துகாணுமே (90)

விட்ட்குறை தொட்டகுறை என்றுரைக்கும் மாந்தரே
தொட்டகுறை எப்படிதெரிந்துணர்ந்தால் சொல்லுமின்
பட்டகஸ்ட்டம் நீரல்லோபளம் வார்த்தைநம்பியே
இஸ்ட்டபடியே திரிந்தால் இருதிநிலைஎப்படி (91)

செய்யும் தொழிலனைக்கும் செவ்வணவே தான்செய்ய
நய்யும்மணதை நழுவாது தான்நிறுத்தி
செய்யும் செயலுக்கு வாக்கைவலுப்படுத்தி
மெய்யை வசப்படுத்தி மேலதனில் இருந்துபாரே (92)

மதமுள்ளது யறிவுக்கா யறிவுள்ளது மதத்துக்கா
மதமுள்ளது வாண்மாவுக்கா ஆண்மாயுள்ளதுமதத்துக்கா
மதமுள்ளது தன்னிலைக்கா தன்னிலையுள்ளது மதத்துக்கா
மதமுள்ளது தன்னிலைக்கே மதியறியகுருவறி (93)

தோற்றமிழுத்ததா யவனை யவனிழுத்தானுத் தோற்றத்தை
மோகமிழுத்ததா யவனை யவனிழுத்தானுமோகத்தை
யம னிழுத்ததா யவனை யவனிழுத்தானுயமனை
சோகமிழுத்தது இதற்குத் தெரிந்துபோம்குருவிடம் (94)

---

சோகம் = அறிவின் பலஹீனம்

சட்டமுடன் தானிருந்து சடப்பொருளை தன்னுள்ளே
தொட்டுவந்து கபாலம் திறந்துநிற்க வல்லிரேல்
ஈசனாகும் உன்நிலை இறுதிநிலை தானுமே
மோசமது போகாமல் முடிவறியக் காணுமே (95)

இருந்தஇடம் மாயமோ இருக்கவழி அறிகிலீர்
இருக்குமிடம் அறியாது இடம்கெட்டு அலைவதேன்
பிறப்புஇறப்பு அற்றஇடம் பிர்மாசனம் தானிருக்க
இறப்புவகை மேற்கொண்டு இனிபிறக்க லாகின்றீர் (96)

அகமும்புற மும்ஒன்று யனைத்திலுந் தனைக்காண
இகத்தில்நல் லொழுக்கத்தில் இன்புற வேயிருந்து
பரநிலை தனையடைய பரம்குரு தனையடைந்து
அரன்நிலை யறிந்து அடைவீர் ஆதிநிலையில் (97)

நினைக்குமிட மெலாம் நின்தவிர்த்து புறத்தில்
அகத்தை யறியாது அழுந்துலழும் உலகீர்
தவத்தை யறியதளம் கண்மூக்கு நடுபுகுந்து
அவத்தை ஒழிப்பீர் அறிவுள்ள மக்காள் (98)

நோக்கும்பொரு ளெல்லாம்நுண் தவிர்த் தேபுறத்தில்
பார்க்கும்பொரு ளில்லாது என்பதினால் அகத்துள்
ஆக்கமெலாம் அகக்கண்கொண் டுன்பொரு ளறிந்தாக்கால்
நோக்கும்பொருளெல்லாம் நுண்பொருளைக் காணலாமே 99

கருவது வுதிரக் கருப் பையதுவாங்கி
கருவதுக் கூட்டிக் கடமது வாக
உயிரது வந்து வுச்சியி லமர்ந்து
பயிலும் சுகத்திற்கு பரிந்தா யுலகிற்கே (100)

தாய்க்குத்தா னென்னுதவி தந்தைக்குத்தா னென்னுதவி
சேய்க்குயிவ ளென்னுதவி செகத்துக்கு நீசெய்வதென்ன
செடமதுள்ளே வுயிரது புகுந்ததேன்
திடம்பட தவம்பெற்றுத் தெரிந் துய்வீரே (101)

எடுத்தக் கடமதனை யினிதுமிறை வேற்றாமல்
படித்துப் படித்துப் பலமதனை வீணாக்கி
துடித்துத் துடித்துத் தூலம்விட்ட வான்மாவை
இழுத்து நிறுத்தமு யலுகின்றீர் பேனுரையீர் (102)

தாயிருந்தென்ன தங்கைதமைய ரிருந்தென்ன தமக்கொரு
[தாரமிருந்தென்ன
சேயிருந்தென்ன சிநேகிதரிருந்தென்ன ஜெகமுழுது
[மாண்டென்ன
பேரிருந்தென்ன பெருமைக்குரிய வன்பர்தம் மருகிலிருந்
[தென்ன
யாரிருந்தென்ன ஆவிதானகன்றுவிடி லாகுவரோ வாய்ந்
[துய்வீர் (103)

ஆக்கை தனைவளர்க்க அரும்பாடு பட்டு
ஏக்க மிகக்கொண்டு யேகியே பொருள்தேடி
தீர்க்கமா யனுபவந் தீரும்வகை காணாது
வேட்கைகொண் டலைந்தால் விளைந்த பயனென்ன (104)

கர்ம மென்று கடத்தினுள் ளமர்ந்து
மர்ம மறிய மானிலத்தி லுலாவி
உலுவி லறிவு வுயர்மனித னாகி
கர்ம மறியக் கதியறிந் துணரே (105)

மணமது ஒன்றாய் மருகிவோர் நிலையில்நின்றால்
குணமது குருகிக் குன்றம்போற் சமைந்திருக்கும்

திரமதை நீறறிந்து தெரிசிப்பீ ருன்கருத்தை
வளரு முன்மதியின் வன்மைதனைக் காணலாமே (106)

பேசாத மெய்நிலையிற் போறிவாய்த் தானின்றுற்
கூசாம லுன்கரு குண்டுமணி போற்றிரண்டு
மூசுதங்கம் போலுன் கடத்தைப் பொன்னாக்கி
மாசில்லா வெண்சுடரில் மகிழ்ந் தமரலாமே (107)

அறுமறை போற்றும் அனல் மயமாக
கருமயங் கண்டு கடத்தி லனுபவித்து
பெருதவம் புரிந்து பொற்றிரைத் திறந்து
அறுமறை தெரிந்து அனல்மய மாகுவீரே (108)

நம்மாற் கருணை நாட்டில் நிலவ
அன்பா லீந்தா னருமை மெய்யுணர்வை
வன்மாயையைச் சுட்டெரிக்கும் வள்ளலின் பொன்மருந்து
என்மய மாக்கு மிறுதிவரை கண்ணுற்றால் (109)

காசாசை கொண்டு கூத்தாடுங் குவலயத்தீர்
ஆத்துமா வகன்றுவிட்டா லாவதொன் றில்லைகாணீர்
சோத்தாவி யேந்திய செடமிருக் கும்போது
ஆத்துமா தனையடைய வாசானை நாடீர் (110)

வந்த வகையறிந்து வாழும் விதமறியாது
பந்தங்க ளூடே பாதவிக்கும் மானிடரே
என்னாளோ வோர்நாள் இயமனடுத்தாக் கால்
அந்நாளை நோக்கி யலறுகின்றீர் ஏனுரையீர் (111)

ஆதியாய்த் தானிருந்து அனுபவிக்கவும் பிறந்து
பாதி யனுபவித்துப் பரம்பொருளை வீணாக்கி

5

ஆதி தனையடைய அரைக்கணமு மெண்ணுது
வாதுவம்பு தான்புகன்ற வம்பன் கடம்வீழ்ந்தால்
ஏதுக் கழுகின்றீர் இயம்புங்காள் மானிடரே (112)

ஆகுஞ் செயலனைத்து மாண்டவன் செயலென்றோதி
போகுங் காளில் பொழுதினை வீண்போக்காமல்
ஆன செயலனைத்தும் யனுபவிக்கத் தாமென்று
காணுஞ் ஜடத்துள் கர்த்தனை யறிந்துணரே (113)

ஆசை தனைக்களைய ஐம்புலனைத் தான்விரித்து
பாச மதையுணர்ந்தாற் பறந்தோடு மாசைகாண்
ஈச னிலையது உம்மிடந் தானிருக்க
மோசம் போகாமல் முடிவறிய வழிகாணீர் (114)

ஆசானைக் காண அரும்பசி யோடிருந்து
பாசத்தி னுள்புகுந்தால் பயனென்ன கண்டீர்
ஊசிமுனை வாசலில் உம்மறிவை தான்பாய்த்தால்
மாசில்லா ஞானியாய் மகிழ்ந்திருக்க லாமே (115)

மறலியா னுயிர்போகும் மார்க்கமதைக் கைப்பற்ற
துறவுதனைப் பூண்டாக்கால் தேர்ந்திடுவ தெங்ஙனம்காண்
அருள்நிலை தன்னில் அமர வழிகண்டால்
கருவதுந் தானொழிந்து காலன் தணலாவான் (116)

தான்கொண்ட ஆசையெல்லாம் மனதினாலே
தனையறியா மூர்க்கருடன் கூடிக் கொண்டு
பேய் போலும் திரிந்துகொண்டு பிதற்றிக்கொண்டும்
புனைந்து மனம் இருக்குமிடம் பித்தர்காணார் (117)

யார்தான் அறிவார்கள் அவனி தன்னில்
அறிவு மனம் ஒன்றுகூடும் இடமதனை

பேரறிவாய் நிற்குமந்த பெரியோர் தன்னை
பிரட்டுருட்டுச் செய்துமே மிரட்டிப் பார்ப்பான் (118)

ஆசைதனை யடக்க ஐம்புலனுந் தாமொடுக்கி
பாசமது களையப் பதுமாசனம் போட்டு
வாசிதனை யேற்ற வகையு மறியாது
ஈசனின் கதியென்றால் ஈடேற்றங் காண்பாயோ (119)

மூலத்தி லுள்ள முக்தியின் பொருளை
காலா லெழுப்பிக் கனலுண்ண வல்லார்க்கு
முத்து மணிபோற் முடியிற் மணித்திரண்டு
ஆதிக்கனதியில் அமர்ந்திருப் பாரே (120)

அறிவை யறிந்து ஆசானையுட் கண்டால்
கருவதுந் தரிக்க காணும்வழி யேதுகாண்
உருவமது மழிந்து வுலாவுபொருள்த் தானாகி
பரம்பொருளுந் தானாய்ப் பரத்தி லமரலாமே (121)

தோகையர்மேல் மோகித்துத் தோயும் இக்கடத்தால்
ஆவதொன் றில்லை யென்றே யறிந்தீரோ
போவதற்கு நாள்வருமுன் பொருந்திவிடினும் மறிவை
சீவன்தனை யறிந்து சிவமாவீ ரண்பர்காள் (122)

பெண்ணின் புஜம்பார்த்துப் பூரித்தெழும் புல்லறிவீர்
தம்மின் னிலையிருக்கும் தன்மைதனைக் காணமல்
முன்னும் பின்னும் முழுதுமிதிற் கழித்தால்
என்னாகு முன்னிலைமை யேங்கி நீயுணரே (123)

ஆசையது முன்னே அவளது குஜங்கண்டாற்
பாசமது யிழுக்கப் பறிக்க வழியில்லாது

ஏனோபிம்மனக் கோலத்தி லேகுகின்றீர் உலகீர்
காணுங்கடத்துட் கட்டிருக்கக் காணீர் (124)

வேல்விழியர் தங்கள் வெம்பார்வை கண்டு
பாழும் மயக்கத்தில் அகப்படும் மாந்தர்காள்
கோலில்லா வெல்லைபோற் குறிப்பில்லா வாசையை
வேலும் மயிலோன் போற்வீற்றிருக்கக் காணே (125)

கொண்டமன ஆசையை குறித்துக் கொண்டு
குறியிருக்கும் நாட்டு நடுபுகுந்து கொண்டால்
கண்டுவிளையாடு மங்கே மனந்தான் உள்ளே
கபடமுடன் ஆசை யெல்லாம் கருகிப்போமே (126)

ஆரும் காணா ஆறுதிரை தான்துலக்க
பாருங் கருவால் பாலமயிர்க் குள்ளே
சிரித்து வலம்புரியும் சிரசுதனில் மேல்நின்று
தீர்த்து அழுக்கெல்லாம் திரையாறுஞ் ஜொலிக்குந்தானே (127)

காணும் பெரியோரைக் கண்மூடித்தனமாய்க் கேள்விகேட்டு
வீணான விபரீதம் விளைவிக்கும் வெறுமண்டுகளே
ஞானக் கடத்துள் அறிவினிலை யுள்ளறிந்தால்
பாழான கேள்விக்குப் பதில்கேட்க விரும்புவரோ (128)

கூற்றுவன் தன்னைக் கொண்டோடுஞ் சமயம்
ஏற்பவன் யாரோ எழுவீர் உலகீர்
ஏற்றவன் கடத்துள் ளிருக்குஞ் சமயத்திற்
காத்தே யவனைக் கபாலத்தில் நிறுத்தீர் (129)

மாளிகையுங் கட்டி மனையாளையுங் கூட்டி
தாதிகளை வைத்த தம்பதிகாள் கேண்மின்

பாதி யுரக்கமதிற் பரந்தோடி னானாவி
ஆவ தென்னே யறிமின் தம்பதிகாள் (130)

சுழிமுனையை யுன்னறிவு திறந்து நின்றதானால்
அரைக்ஷண முங்கூட அகலாமற் றானிருக்கும்
கரும்பு புசித்தாற்போற் கண்டு களித்தார்க்கு
கர்ப்பூர.ஜோதிபோற் கலக்குமது பரத்தில் (131)

காணி யிடத்திற்கரு கட்டறுத்து மேற்சென்றால்
ஊன்றி யுச்சியி லுருளும்பொரு ளாய்த்திரண்டு
ஆணிபோ லூன்றி யறிவை மேல் ஜொலித்து
ஆனவிக் கடத்தா லனுபவ முடிக்கலாமே (132)

அறிவினிலே முதிர்ந்தா லகிலமெலா முன்னுள்
பரிணமித்து நிற்கும் பாருன் னுள்ளே
திறமதனை நீரறிந்து தெரிசிப்பி னுன்னிலையை
பரன்நிலை யெய்திப் பரவுவா யுலகமெலாம் (133)

பார்ப்பதினால் ஆசை பகருவதினால் மோகம்
காப்பதினால் இன்பம் கருதினால் ஒன்றுமில்லை
ஏங்குவதினால் ஞானம்கரு வேற்றிவைத்துச் சுழிமுனையில்
காக்கும் வகையுற்றால் காணுவது பேரின்பம் (134)

அறிவின் விழிப்பால் ஆக்கையைப் பெற்று
கருவினை யறியாது கருத்தினை யிழந்து
உருவினை யழிக்க உடம்பைப் பேணாது
கர்ம மென்றால் காண்பது யார் (135)

மனமொடு வாக்குமுக்கியம் மகேஸ்வரனைத் தானறிய
மனமொடு வாக்குமுக்கியம் மகேஸ்வரனாய் இருக்க

மனவாக்கு காயமனைத்தும் மருகினார் நிலைபட்டால்
குணமன அறிவுஐக்கியம் குன்றாதிருக்க லாமே (136)

கடமது வந்து கடத்துளுரு வானதேன்
உயிரது புகுந்து உருண்டு வந்ததேன்
மடமையில் நின்று மரணிக்கும் மாந்தர்காள்
தவநிலை பெற்றுத் தன்னையறிந்துய்வீரே (137)

கோலம் கொண்ட பெரியோரைக் குருக்களென்று
கோணாது அவருக்கு பல தொண்டு செய்து
ஞானம் அடையும் நாட்டத்தை நழுவவிட்டு
நாநிலத்தில் கெட்டுழல்வார் அநேகர் தாமே (138)

மக்களென்று பேரெடுத்தால் மாநிலத்தில்
மகேஸ்வரனை கூடுமந்த மதியைப் பாரு
நிற்கையிலே மனமறிந்து சுவாசம் நின்றால்
நிலைத்து நிற்கும் பொருளதுதான் மகேஸ்வரனே (139)

சடமொடு ஜீவனைக்கியம் சார்ந்துற்ற தாலே
சடப்பொருளைத் தானடைய சகசநிஷ்டை பாரு
பிசகாமல் மூலமதில் பிரணவத்தை ஊட்டி
பிரித்தெலும் குண்டலியின் பிளம்பைப் பாரே (140)

சத்தி சிவரூபமது ஜடமது தான்
சதா நித்தியம் தான்காண செபதவங்கள்
சித்திய தீர்க்கங்காண ஞான மார்க்கம்
சதா சிவநிஷ்டையே ஞானி இருப்பு (141)

ஜாதிஎந்த மதமானாலும் அறிஞரே பார்
சங்கையுள்ள ஜாதிமத பேதம் விட்டு

கோணாது அவர்முகத்தின் குறியை கண்டு
குன்றாத மனமுடனே அவர்குணத்தில் சேரு (142)

ஆசானென்று பலபேர்கள் அவனி தன்னில்
அதிகமாய் பலவேஷம் பூண்டு கொண்டு
கூசாமல் ஓர்நிலையின் குறியை வைத்து
கொண்டாடும் அவர்களிடம் குணத்தை நாடு (143)

கண்டகுரு பலருள்ளே ஒருவர் நல்லோர்
காணலாம் அவர் குணத்தின் நன்நாட்டத்தை
விண்டபடி அவருக்குத் தான் பணிந்தால்
வீரியமுடன் தன்ஜோதி தானே காண்பாய் (144)

முத்திபெற மூலத்தில் மனதை நாட்டி
சித்தியுள்ளோன் விரல் சுழிமுனையில் பட்டால்
சத்தியுள்ள உன்உயிர் சதா புகுந்து
நித்தியமாய் தன்னிலையும் நிலைத்து நிற்கும் (145)

ஊனோடு உயிரோடு உலகிருக்கும் போது
உனையறியும் மார்க்கமது உறுதியிற் கொள்ளாது
தேடர்கறிய பொருளென்று தெரிந்தவன்தான் சொன்னான்
தேடியந்த பொருளடையத் தெளிவு பெறுவாயே (146)

---

கருவின் மெய்த்துளிக் கபாலத்திற் றரித்து
உருப் பெற்று நின்றுலாவும் அன்பருக்கு
அனல் மயமாகி ஐக்கிய மடைய
கனம் ஓர் மொழியே காப்பு (147)

கூற்றுவன் தனைக் கொல்லும் பரஞ்ஜோதி
ஆற்றல் தானில்லா தலையும் மக்களை
ஏற்றுய் வித்தானேறு மெய்ப் பொருளால்
போற்று மவனருளைப் புனைந்து (148)

கங்குல் பகலொன்றுய்க் கலக்குந்தலத்திற்
பொங்கும் மதிபுகுத்தி மங்காது மெய்நிலை
தாங்கிய வள்ளலின் ஜெனனத்திருநாள்
நீங்காது நிலவும் நிறைந்து (149)

ரீங்காரந் தன்னுள் நிரந்தரத்தைக் கண்டார்க்கு
போங்கால மேது புரிவீர் ஈங்கு
ஆங்கிருந்த ஆதி மெய்நிலையை
நீங்கா தடைந்திடுவீர் நீர் (150)

அருள்நிலை கண்டே வன்பி லமர்ந்தோர்க்கு
மருள்நிலை யேது மயக்க இருளில்
கருமயமா யிருந்தக் கனமதனைக் கண்டு
பெறுமின் பெருமுக்திப் பேறு (151)

கருவின் னிலைதேடிக் காலுணு மக்களை
இருள் அறையி லிருத்தி யுபதேசித்து
புருவத் திடையிற் கருவைப் புனையவைத்தக்
கருவின் குருவானைக் கார் (152)

ஆங்காரக் காற்றி லலைமோது மன்பர்காள்
போங்கால மொன்றிருக்கக் கண்டே ஈங்கு
நீங்காப் பெருநிலையை நீவி ரடைவீர்
பாங்காய்க் குருவைப் பணிந்து (153)

எண்ணித் துலக்கு மெடுத்துரைக்குஞ் சொல்லனைத்தும்
தம்மின் செயலென்று மோதித்து மண்ணில்
மனிதனாய்ப் பிறந்த மகிமைதனைத் தானுணர
இன்றே வருவீ ருலகீர் (154)

மாற்றிப் பிறவா வகைபோது வித்து
ஏற்கும் எமது குருவை நோக்கி
கூற்றுவன் கையி லகப்படா துய்ய
ஏற்று வருமின் னுலகீர் (155)

கருக்குழியிற் பிறக்குங் கருவதனை நீக்க
அருமருந்து வழங்கும் வள்ளலின் திருமுகநோக்கி
அடையுமின் னுயர்ஞான வனல்மயத்தில் தாம்கலக்க
இடையினில் வீழா திருந்து (156)

மறுபிறவி யொழிக்க மார்க்கமதைக் காட்டிய
குருபரஞ் ஜோதி ஜனன நன்னாளை
நறுமண மூட்டி நாடெல்லாம் பரப்ப
ஒருமித்து வாரீர் உகந்து (157)

அல்ல லறுத்தனல் வாக்கையுள் ளுணர்த்தும்
வள்ளல் பரஞ்ஜோதி வன்மையினால் தள்ளாது
மெய்க் கருவுண்டு மேதினியில் தாம்ஜொலிக்க
எல்லோரும் வாரீர் விரைந்து (158)

மெய்யுணர் வுண்டு மேதினியில் நின்றால்
தையல் வலைக்குட்படாது மெய்யில்
யமபய மேலிட்டு வந்தடுக் காதுநின்று
காலன் தனைத்தெரிந்து கனலாக்கலாம் (159)

# ஞானக்குறள்

## அதிகாரம் I

### காப்பு

கருவின் கனம் கருத்தி லுணர்ந் தோர்க்கு
உருவம் அழிவதே யுரியகாப்பு (160)

தரித்த சிறுதுளியாற் றான்பெற்ற இவ்வுடம்பை
மரிக்குமுன் னிலைக்கு மாற்று (161)

பெண்ணின் வேகத்தாற் பெற்ற யிவ்வுடம்பை
தன்னுணர்வின் வேகத்தால் தன்னிலையாக்கு (162)

அணுக்களின் சேர்க்கையா லானயிவ் வுடம்பை
கருவின் கனலாலணு மயமாக்கு (163)

வீழுமிக் கடம் வீழ்வதற்கு முன்
ஆழ்ந்துட்கடத்தி லரன்னிலையைக் காண் (164)

காணுங் கடத்தணுக்கள் கட்டு விடுமுன்
வேணு முன்னறிவு வேந்தன்னிலை யடைய (165)

உடம் பிணைப்பெற்ற வுறுதியாவ தெல்லாம்
திடம்படத் தன்னிலை யடைய (166)

பிறப்பிணைப் பெற்ற பயனாவ தெல்லாம்
இறப்பின்றி யிறுதி யடைய (167)

ஆய கலை களத்தனையுங் கற்றாலும்
யமனடுத்தாக்கா லேற்குமோ (168)

தொல்லுலக வாசையிற் றோய்ந்து ஒழித்தார்க்கு
வையகத்தி லேது வரம்பு (169)

கடத்திலனு பவங் காண உயிரறிந்தால்
யமபய மெங்கே யிவர்க்கு (170)

அதிகாரம் 2

வன்னிமரத்து வகையது போலுன் னுடம்பை
பொன்மய மாக்குமுன்பொரு ளறிந்தால் (171)

அஞ்ஞானத்திற் நின்று வருள்நிலை கண்டால்
மெஞ்ஞான வீட்டில் மெய்ப்பொருளாய் நிற்பர் (172)

காட்டிலேதிரிந்து காய் கிழங்கு தின்றாலும்
நாட்டிலே யுண்டு நலன் (173)

பெண்ணாசை தன்னைப் புறக்கணித்து நின்றாலும்
பெண்ணாசையன்றோ பேரின்பத்திற் குதவி (174)

மண்பெண் பொன்மயக்க மென்று சொல்லுவான்
பின்னே னெடுத்தா னிப்பிறவி (175)

நீளுங் கர்மம் நீகண்டால் உன்னறிவில்
மாளுமக்கர்மம் மாமெய்யுணர் வால் (176)

வையகத்து வரம்பின் வழிதுறை கண்டார்க்கு
மெய்யகத்தி லுண்டு மோக்ஷம் (177)

காணாத மெய்யுணர்வைக் கண்டுணரு மாந்தர்க்கு
ஓயாப்பிறவி யொழிந்தது வக்கணமே (178)

கருவி னிலையறிந்து கண்டுணரு மன்பர்க்கு
உருவிற் கேதுண்டு துயர் (179)

பாசத்தில் நின்றுப் பாசமதை யுணர்ந்தால்
மாசற்ற மெய்யுணர்வில் மன்னுவதாமே (180)

## அதிகாரம் 3

இருளறையி னின்றுமென் னம்பன்விரல் பட்டால்
அருள்மயமாய் அம்பலத்தி லாடுவார் (181)

குருவினைப் பெற்ற குணமாவ தெல்லாம்
உருவொன் றின்றிவூன் றி நிற்பதற்கே (182)

மெய்த்தவத் தினைப்பெற்றப் பயனாவ தெல்லாம்
தன்னுள் பிறவொன்றை நாடாதிருக்க (183)

கேட்டல் சிந்தித்தல் தெளிதல் யிவையன்றோ
தூயமெய் நெறிக்குத் துணை (184)

அறிந் தறிந்துள்ளே யகன்று நின்றார்க்கு
தெரிந்தது இவனுள் சிவமயந் தானே (185)

வேக மடக்கி வெளிதனைக் கண்டார்க்கு
மோகங் களேது முனைந்து (186)

புருவத்திடை நடுவிற் பொருந்திநிற்க வல்லார்க்கு
இறப்பின்றி இருப்பது எளிது (187)

ஆய்ந்தாய்ந்துள்ளே யரன்னிலையைக் கண்டார்க்கு
ஈந்ததேயந் நிலைபிறைவன் மயமாய் (188)

அப்பனருளாற் அமைதியுறக் கண்டார்க்கு
சொப்பன மேதுப் பிறப்புக்கினி (189)

பாடித்துதித்துப் பலரறியா மெய்ப் பொருளை
தேடிவந்தடைந்தோம் தேசிகன் தன்னருளால் (190)

## அதிகாரம் 4

முத்தனடி பணிந்து மூலப்பொரு ளுண்டால்
அத்தன் தலைவன் அவன் (191)

புலனைந்து மொடுக்காமற் பூரித்து நின்றாக்கால்
புலனைந்து மொன்றாய்ப் பூரித்தே நிற்கும் (192)

ஐம்பொறியின் விழிப்பு அடக்காமல் நின்றாக்கால்
அவ்விழிப்பால் பெருகும் வுணர்வு (193)

சிற்றின்பத் தில்நின்று சிரசி லுணர்வுண்டால்
ஐயன்மெய்ப் பொருளாரைத் துளிவாராதே (194)

உணர்ந்துணர்ந் துள்ளே யுருகிநின் றார்க்கு
கழன்றது பல்வினைக் கலக்கமற (195)

மெய்யுணர்வு கொண்டு மேல்நிலையில் நின்றால்
ஐயன் பரம்பொரு ளாகுவார் தானே (196)

கண்க ளிடைநடுவிற் கலக்கமற நின்றார்க்கு
என்று மைக்கிய மெளிது (197)

நெற்றியிற் சென்று நிலைதனைக் கண்டோர்க்கு
பற்றிருக்கு மிவ்வுடம்பு பரத்திற்கலக்கும் (198)

உணர்வினை யுணர்ந்து வுச்சியில் நின்றார்க்கு
பல்வினை யொழிந்துப் பரத்திற்கலக்கும் (199)

கற்க இதை பன்முறையும் குணம்பெற பயன்படுத்தி
நிற்கயித னுள்உணர்ந்த நிலையதுவே முடிவுகும் (200)